## இயல் 1

## கற்கண்டு - குற்றியலுகரம், குற்றியலிகரம்.

அறிமுகம்

தமிழ் எழுத்துக்களை **முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள்** என இருவகைப்படும்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு மெய் எழுத்துக்கள் பதினெட்டு ஆகிய **முப்பது** எழுத்துகளும் **முதலெழுத்துகள்** எனப்படும்.

சார்பு எழுத்துகள் **பத்து** வகைப்படும்.

1.உயிர்மெய் 2.ஆய்தம் 3.உயிரளபெடை 4.ஒற்றளபெடை 5.குற்றியலுகரம் 6.குற்றியலிகரம் 7.ஐகாரக்குறுக்கம் 8.ஔகாரக்குறுக்கம் 9.மகரக்குறுக்கம் 10.ஆய்தக்குறுக்கம்.

### குற்றியலுகரம்

குற்றியலுகரம் தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.

எடுத்துக்காட்டு: காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

### முற்றியலுகரம்

தனிக்குறில் எழுத்தை அடுத்துவரும் சொல்லின் உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும் மரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும். இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பது **முற்றியலுகரம்** என்பர்.

எடுத்துக்காட்டு: புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு..

### குற்றியலுகரத்தின் வகைகள்

**1.நெடில் தொடர் குற்றியலுகரம்**

தனிநெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர் குற்றியலுகரம் எனப்படும். அவை ஈரெழுத்து சொற்களாக மட்டுமே அமையும்.

எடுத்துக்காட்டு: பாகு, மாசு, காடு, காது, ஆறு.

**2.ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்**

ஆயுத எழுத்தை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆயுதத் தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

எடுத்துக்காட்டுக்கு: எஃகு அஃது

**3.உயிர்த் தொடர் குற்றியலுகரம்**

தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த் தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

எடுத்துக்காட்டு: அரசு (ர = ர் + அ)

**4.வன்தொடர்க் குற்றியலுகரம்**

வல்லின **(க்,ச்,ட்,த்,ப்,ற்)** மெய் எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

எடுத்துக்காட்டு; பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று.

**5.மென்தொடர்க் குற்றியலுகரம்**

மெல்லின **(ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்)** மெய் எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம்.

எடுத்துக்காட்டு: பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று.

**6.இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

இடையின **(ய்,ர்,ல்,வ்,ழ்,ள்)** மெய் எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

எடுத்துக்காட்டு: எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.

## குற்றியலிகரம்

தன் மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

**குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.**

**இடம் 1**

குற்றியலுகரச் சொற்கள் தொடர்ந்து அகரத்தை முதல் எழுத்தாகக் கொண்டு வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும். இந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கும்.

எடுத்துக்காட்டு: கொக்கு (க் + உ = கு) + யாது = கொக்கியது (க் + இ = கி)

**இடம் 2**

'மியா' என்பது ஓர் அசைச்சொல். ஓசை நயத்திற்கு வருவது. இதில் 'மி' யில் (மி = ம் + இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம் பெறும்போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

எடுத்துக்காட்டு: கேள் + மியா = கேண்மியா

குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது

**குறுவினா**

1.'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

குறுமை + இயல் + உகரம் - குற்றியலுகரம். வல்லின எழுத்துக்கள் ஆறின் மீதும் ஏறி (சேர்ந்து வரும் உகரம் தனக்கு உரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இதற்குக் குற்றியலுகரம் என்று பெயர்.

எடுத்துக்காட்டு: காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

2.குற்றியலிகரம் என்றால் என்ன?

(i) குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

(ii) வரகு + யாது = வரகியாது.

(iii) குற்றியலுகரச் சொற்களின் முன் யாது என்னும் சொல் வருமொழியாக வந்து சேரும் போது, நிலைமொழியீற்று 'உ' கரம் இகரமாகத் திரிந்து தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இது 'குற்றியலிகரம் எனப்படும்.